**அமைச்சரவை அலுவலக கடித தலைப்பை சட்டவிரோதமாக பயன்படுத்தி செய்யப்படும் மோசடிகள் தொடர்பில் பொதுமக்களுக்கு அறியச் செய்வித்தல்**

வெளிநாடுகளிலிருந்து கிடைக்கப்பெறவுள்ள பொதிகள் மற்றும் கப்பல் சரக்குகளுக்கு அமைச்சரவையினால் சுங்கத் தீர்வை சலுகைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும் இது சம்பந்தமாக செயலாற்றுவதற்கு தமக்கு தலையிட முடியுமெனவும் குறிப்பிட்டு அமைச்சரவை அலுவலகத்தின் கடிதத் தலைப்பை மோசடியான விதத்தில் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட போலியான கடிதங்களை முன்வைத்து மோசடிகாரர்கள் அல்லது மோசடியாக செய்யப்படும் அமைப்புகள் சிலரிடம் பணம் பெற்றுக் கொள்கின்றமை பற்றிய தகவல் அமைச்சரவை அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

02. எவரேனும் ஆள் ஒருவருக்கு வெளிநாடுகளிலிருந்து கிடைக்கப்பெறும் பொதிகள் அல்லது கப்பல் சரக்குகளுக்கு சுங்க இறக்குமதி வரிச் சலுகையோ அல்லது வேறு எந்தவித வரிச்சலுகையோ வழங்குவதற்கு அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்படவில்லையென்பது பற்றி வலியுறுத்தும் அமைச்சரவைச் செயலாளர் அத்தகைய போலியான கடிதங்களை நம்பவேண்டாமென பொதுமக்களிடம் கேட்டுக் கொள்கின்றார். இது சம்பந்தமாக புலனாய்வு செய்து மோசடியாக செயற்படுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சரவைச் செயலாளர் பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்துள்ளார்.

03. அமைச்சரவை அலுவலகத்திலிருந்து கிடைக்கப்பெறும் ஏதேனும் கடிதமொன்றின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அமைச்சரவைச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும் கடிதமொன்றின் மூலமோ அல்லது இந்த அலுவலக கடிதத் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 0112329620 அல்லது 0112325279 என்னும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக அமைச்சரவை அலுவலகத்தைச் சேர்ந்த சிரேட்ட உத்தியோகத்தர்களை தொடர்புகொள்வதன் மூலமோ அல்லது info@cabinetoffice.gov.lk என்னும் மின்னஞ்சல் முகவரி ஊடாகவோ விடயங்களை கோரி உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும்.